www.Padasalai.Net

# SUCCESS ACADEMY

42, LAKSHMI COMPLEX 2ND FLOOR,
THOPPAI CHETTY STREET,
WALAJAPET, VELLORE DT
9994927574

SUCCESS ACADEMY

# தமிழ்

www.tetcoaching.net

Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

# செய்யுள்

## புலவர்களும் நூல்களும்

**பாவேந்தர் பாரதிதாசன் :**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம் |
| ஊர் | : | புதுச்சேரி |
| பெற்றோர் | : | கனகசபை - இலட்சுமி |
| காலம் | : | 29.04.1891 to 21.04.1964 |
| இயற்றிய நூல்கள் | : | பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இசையமுது, அழகின் சிரிப்பு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், இருண்ட வீடு, தமிழ் இயக்கம்,"எங்கெங்குக் காணினும் சக்தியடா" எனத் தொடங்கும் பாடலினால் பாரதியின் கவிதா மண்டலத்தில் நுழைந்தவர். |

**நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் :**

| | | |
|---|---|---|
| பெற்றோர் | : | அம்மணி அம்மாள்,வெங்கடராமன் |
| பிறப்பிடம் | : | மோகனூர், நாமக்கல் மாவட்டம் |
| காலம் | : | 19.10.1888 - 24.08.1972 |
| சிறப்பு | : | தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞர், தமிழ் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்,"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்றும் "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு" |

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- என் கதை மலைக்கள்ளன், திருக்குறள், புது உரை, தமிழன் இதயம், சங்கொலி, கவிதாஞ்சலி, காந்தி அஞ்சலி, தமிழ் வேந்தன், அன்பு செய்த அற்புதம், அவனும் அவளும் இவர் இயற்றிய நூல்கள்.
- காந்தியக் கவிஞர் என அழைக்கப்பட்டார்.

**கவிமணி சி.தேசிக விநாயகம் பிள்ளை :**

| | | |
|---|---|---|
| பெற்றோர் | : | சிவதாணுப்பிள்ளை – ஆதிலட்சுமி |
| பிறந்த ஊர் | : | தேரூர் - கன்னியாகுமரி மாவட்டம் (நாஞ்சில் நாடு) |
| காலம் | : | 27.08.1876 – 26.09.1954 |
| இயற்றிய நூல்கள் | : | மருமக்கள் வழி மான்மியம், மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், உரைமணிகள். |

**திருவள்ளுவர் :**

- திருக்குறளை இயற்றினார்.
- காலம் கி.மு.31.
- இந்த ஆண்டு பற்றி தெளிவான சான்று கிடைக்கவில்லை.
- பெற்றோர் பற்றி தெளிவான சான்று கிடைக்கவில்லை.
- சிறப்புப் பெயர்கள் நாயனார், நான்முகனார், முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், மாதானுபங்கி.
- இவர் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர் என்று கூறப்படுகிறது.

**திருக்குறள் :**

- இது அறம் + பொருள் + இன்பம் என மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.
- இதில் உள்ள இயல்களின் எண்ணிக்கை 9.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- அதிகாரங்களின் எண்ணிக்கை 133.
- அறத்துப்பாலுக்கு 38 அதிகாரங்களும்.
  பொருட்பாலுக்கு 70 அதிகாரங்களும்,
  இன்பத்துப்பாலுக்கு 25 அதிகாரங்களும்
  பிரிக்கப்பட்டுள்ளது.
- "உலகப் பொதுமறை" எனவும் "முப்பால்" எனவும் "வாயுறைவாழ்த்து" எனவும் இந்நூல் அழைக்கப்படுகிறது. மேலும், உத்திரவேதம், தமிழ் மறை, பொதுமறை, பொய்யா மொழி எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்நூலைப்பற்றி புகழ்ந்து பாடும் நூல் "திருவள்ளுவ மாலை" இதனை இயற்றியவர் இறையனார் மற்றும் சிலர்.

**மூதுரை :**

- முதுமை + உரை = மூதுரை என்பதற்குச் சான்றோர்களது அறிவுரை என்று பொருள். இது மக்கள் வாழ்க்கைக்கு தேவையான முக்கிய கருத்துகளை கூறுகிறது.
- இதற்கு இன்னொரு பெயர் **"வாக்குண்டாம்"**

**ஔவையார் :**

- பெண்பாற் புலவர்
- இவர் பிற்கால ஔவையார்
- இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

**நறுந்தொகை :**

- கொற்கை என்றும் நகரத்தை ஆண்ட அதிவீரராம பாண்டியனால் இயற்றப்பட்டது.
- 82 பாடல்களைக் கொண்டது.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- இதற்கு இன்னொரு பெயர் வெற்றிவேற்கை
- நீதி நூல் அறக்கருத்துகளை உணர்த்துவது.
- கொற்கை என்பது தற்காலத்தில் தென்காசிக்கு உட்பட்ட பகுதி.

**நீதிநெறி விளக்கம் :**

- இந்நூல் திருவைகுண்டத்தில் (தூத்துக்குடி மாவட்டம்) பிறந்த குமரகுருபரர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது.
- இவர் திருவாரூர்நான்மணிமாலை என்னும் நூலை இயற்றியவர்.
- இவர் சண்முகசிகாமணிக்கும் சிவாமிசுந்தரி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார்.
- காலம் 17 –ஆம் நூற்றாண்டு.
- இவர் மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் என்ற நூலையும் எழுதியுள்ளார். மேலும் முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பா, மதுரைக்கலம்பகம்.

**பாரதியார் :**

- இயற்பெயர் சுப்பிரமணி.
- பெற்றோர்களது பெயர் சின்னசாமி, இலக்குமி
- சிறப்புப் பெயர் மகாகவி, தேசியக்கவி, சிட்டுக்கவி.
- இவர் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு போன்ற நூல்களை எழுதியுள்ளார். மேலும் முரசு, சுதேச கீதங்கள்.
- காலம் 11.12.1882 முதல் 11.09.1921 வரை.
- ஞானரதம், சந்திரிகையின் கதை முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- சுதேசமித்திரன் இதழின் உதவி ஆசிரியராகவும் இந்தியா இதழின் ஆசிரியராகவும் இருந்தார்.
- பாட்டுக்கொரு புலவன் பாரதி.
- தற்கால தமிழ் இலக்கியத்தின் விடிவெள்ளி
- நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா.
- மக்கள் கவி.

**இராமலிங்க அடிகள் :**

- கடலூர் மாவட்டம் மருதூரில் (சிதம்பரம்) பிறந்தார்.
- பெற்றோர்களது பெயர் இராமையா, திருமதி. சின்னம்மை.
- "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கை கொண்டவர்.
- வள்ளலார் என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுகிறார்.
- திருவருட்பா என்னும் நூலையும் ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.
- காலம் 05.10.1823 முதல் 1874 வரை.
- திருவருட்பா ஆறு திருமுறைகளைக் கொண்டது.
- மொத்தம் 399 பதிகங்களையும், 5818 பாடல்களையும் கொண்டது.
- வடலூர் சத்திய தருமசாலை ஒன்றை நிறுவினார்
- தண்ணரில் விளக்கேற்றியவர் என்றும் அழைக்கப்படுகிறார்.

**காளமேகப் புலவர் :**

- இயற்பெயர் வரதன்

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- பிறந்த ஊர் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள எண்ணாயிரம்.
- மழை பொழிவதைப் போல் பாடுவதில் வல்லமை அதனால் இவர் காளமேகப் புலவர் என அழைக்கப்படுகிறார்.
- ஆசுகவி, சிலேடை (இரட்டுற மொழிதல்) பாடுவதில் வல்லவர்

**விளம்பி நாகனார் :**

- பிறந்த ஊர் விளம்பி
- இவர் நான்மணிக்கடிகை என்னும் நூலை இயற்றினார்.
- கடிகை - மாலை

**தாயுமானவர் :**

- 18-ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் / மனைவி பெயர் மட்டுவார் குழலி அம்மையார்.
- வேதாரண்யம் (திருமறைக்காடு) இவரது பிறந்த ஊர். நாகப்பட்டினம் மாவட்டம்.
- விஜயரகுநாத சொக்கலிங்கம் என்பவரின் அவையில் கருவூல அலுவலராக இருந்தார்
- பெற்றோர் கேடிலியப்பன், கெசவல்லி.

**இனியவை நாற்பது :**

- இதனை எழுதியவர் பூதஞ்சேந்தனார்.
- இவர் மதுரை தமிழ் ஆசிரியர்
- வாழ்ந்த காலம் 2-ஆம் நூற்றாண்டு
- பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

**புகழேந்திப் புலவர் :**

- "நளவெண்பா" என்னும் நூலை இயற்றினார்.
- இவர் வரகுண பாண்டியனின் அவையில் புலவராக பணியாற்றினார்.
- இவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்கி.
- சமகால புலவர்கள் ஒட்டக்கூத்தர், ஔவையார்
- சிறப்பு பெயர். "வெண்பாவிற்கு புகழேந்தி"
- பிறந்த ஊர் பொன் விளைந்த களத்தூர் (P.V.களத்தூர்)
- காலம் 12-ஆம் நூற்றாண்டு
- நளவெண்பா 3 காண்டங்களைக் கொண்டது. 431 வெண்பாக்களைக் கொண்டது.

**ஒட்டக்கூத்தர் :**

- மூவர் உலா என்னும் நூலை எழுதியவர்.
- பிற நூல்கள் தக்கயாகப் பரணி, குலோத்துங்கள் பிள்ளைத் தமிழ்.
- இராமாயணத்தில் உத்திரகாண்டம் எனும் 7-ஆம் காண்டத்தை எழுதியவர்.
- 12-ஆம் நூற்றாண்டு

**திருமூலர் :**

- 10-வது திருமுறையான "திருமந்திரம்" என்னும் நூலை இயற்றினார்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- திருமந்திரத்திற்கு வேறு பெயர் தமிழ் மூவாயிரம்
- "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", என்னும் தொடர் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.
- 3 காண்டம் 36 பாடல்கள்

**தேம்பாவணி :**

- இந்நூல் வீரமாமுனிவர் என்ற பெயர் கொண்ட "கானஸ்டாண்டின் ஜோசப் பெஸ்க்கி (வீரமாமுனிவர்)" என்பவர் எழுதினார்.
- பிறந்த ஊர் இத்தாலி நாட்டில் உள்ள காஸ்திக்கிளியோன்.
- 30-ஆம் வயதில் தமிழ்நாடு வந்து மதுரை சுப்பிரதீபக் கவிராயரால் தமிழ் பயின்றுள்ளார்.
- சதுரகராதி, ஞானோபதேசம், பரமார்த்தகுரு கதை, தொன்னூல் விளக்கம், திருகாவலூர்க் கலம்பகம்.
- காலம் 1680 – 1747 வரை.

**வில்லிபாரதம் :**

- இதனை இயற்றியவர் ஸ்ரீ வில்லிபுத்தூரார்
- ஆதரித்த வள்ள வரபதி ஆட்கொண்டான்
- காலம் 14 ஆம் நூற்றாண்டு
- இது 10 பருவம், 4350 பாடல்கள் கொண்டது.
- இது ஒரு வழி நூல்

**முடியரசன் :**

- பெற்றோர்களது பெயர் சுப்பராயலு – சீதாலட்சுமி
- பிறந்த இடம் பெரியகுளம் (தேனி மாவட்டம்)
- காரைக்குடியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தார்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

www.Padasalai.Net

- கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளால் தரப்பட்டது
- அண்ணா, பெரியாருடன் மிகுந்த நட்பு கொண்டவர்
- காலம் 1920 – 1998
- இயற்பெயர் துரைராசு
- தமிழக அரசு “பூங்கொடி” என்னும் காவியத்திற்காக 1966-ல் பரிசு வழங்கியது.

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் :**

- இவர் “மக்கள் கவிஞர்” என அழைக்கப்படுகிறார்.
- செங்கப்படுத்தான் காடு என்னும் கிராமத்தில் பிறந்தார். (பட்டுக்கோட்டை வட்டம்)
- காலம் 13.04.1930 – 08.10-1959)
- திரைப்பட பாடல்களை எழுதியுள்ளார்.

**உடுமலை நாராயணக் கவி :**

- நாடக எழுத்தாளர்.
- திரைப்பட பாடல்கள் ஆசிரியர்
- “பகுத்தறிவுக் கவிராயர்” என்ற பட்டப்பெயர் இவருக்குண்டு.
- வாழ்ந்த காலம் 25.09.1899 முதல் 23.05.1891 வரை

**திரு.வி.க. :**

- **திரு**வாரூர் **வி**ருத்தாசலனார் **க**ல்யாணசுந்தரம் இதுதான் திரு.வி.க என அழைக்கப்பட்டது.

SUCCESS ACADEMY

www.tetcoaching.net

Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- இவர் பிறந்த ஊர் காஞ்சிபுரம் மாவட்டம், துள்ளம் என்னும் கிராமம், தற்சமயம் தண்டலம் என்று அழைக்கப்படுகிறது.
- தமிழ்த்தென்றல், உரைநடையின் தந்தை என்ற அடைமொழிகளால் குறிக்கப்படுகின்றன.
- இவர் எழுதிய நூல்கள் பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், மனித வாழ்க்கையும், காந்தியடிகளும், முருகன் (அ) அழகு உரிமை வேட்கை.
- காலம் 26.08.1883 முதல் 17.091953 வரை
- தொழிலாளர் நலனுக்கும் பெண்ணின் விடுதலைக்கும் பாடுபட்டவர்.

**முதுமொழிக் காஞ்சி :**

- இந்நூலை இயற்றியவர் மதுரை கூடலூர் கிழார்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இன்னொரு பெயர் அறவுரைக்கோவை
- இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன.
- ஒரு அதிகாரத்தில் 100 பாடல்கள் உள்ளன.

**திரிகடுகம் :**

- இந்நூலை இயற்றியவர் நல்லாதனார்
- திரிகடுகம் - சுக்கு + மிளகு + திப்பிலி என்று பொருள்படும்
- இந்த நூலின் மூன்று அறக்கருத்துகள் இடம் பெறும்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

www.Padasalai.Net

**வாணிதாசன்**

:

- பிறந்த இடம் வில்லியனூர் (புதுவை)
- தாய்த்தந்தையார் அரங்க திருக்காமு – துளசியம்மாள்
- சிறப்புப் பெயர்கள் கவிஞரேறு, பாவலர் மணி
- தமிழகத்தின் "வேர்ட்ஸ் வொர்த்" என அழைக்கப்படுகிறார்.
- "குழந்தை இலக்கியம்" என்னும் பாடலை பாடியுள்ளார்.

**கண்ணதாசன் :**

- இயற்பெயர் முத்தையா
- பிறந்த ஊர் சிவகங்கை மாவட்டம் சிறு கூடல்பட்டி
- பெற்றோர் சாத்தப்பன் - விசாலாட்சி
- கற்பனைப் பெயர்கள் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி, கமகப்பிரியன்.
- இயற்றிய நூல்கள் ஆட்டனத்தி ஆதிமந்தி அர்த்தமுள்ள இந்துமதம், மாங்கனி
- திரைப்படப் பாடல்கள் பல இயற்றியுள்ளார்.
- காலம் 24.06.1927 – 17.10.1981 வரை
- தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞராக இருந்தார்
- சாகித்திய அகாடமி பரிசை வென்றார்.
- அமெரிக்கா சென்றபோது சிகாகோவில் உயிரிழந்தார்
- தென்றல், தென்றல் திரை, சண்டமாருதம், முல்லை, கண்ணதாசன் முதலிய பத்திரிக்கைகளை நடத்தியவர்

SUCCESS ACADEMY

www.tetcoaching.net

Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

**பழமொழி :**

- இந்நூல் இயற்றியவர் முன்றுறையரையனார்
- "முன்றுறை" என்பது ஊரின் பெயர்.
- இது பதினெண் கீழக்கணக்கு நூல்களுள் ஒன்று
- இதனை "பழமொழி நானூறு" எனவும் கூறுவர்
- பழமொழிக்கு வேறுபெயர்கள் முதுமொழி, உலகவசனம் முதலியன.

**ஜெயங்கொண்டார் :**

- இவர் கலிங்கத்துப் பரணி என்னும் நூலை இயற்றியவர். மேலும் இசை ஆயிரம், உலாமடல் இயற்றினார்
- பரணி பாடுவதில் ஒப்புயவற்று விளங்கியதால் "பரணிக்கோர் ஜெயங்கொண்டான்" என்னும் பட்டப்பெயரை பலபட்டடைச் சொக்கநாத புலவரால் புகழப்பட்டது.
- குலோத்துங்க சோழனின் அவைக் களப்புலவராக இருந்தார்
- கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று
- ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி வெற்றி வீரத்தலைவனை புகழ்ந்து பாடுவது பரணி
- கலிங்கத்துப் பரணி முதலாம் குலோத்துங்க சோழனை பாட்டுடைத் தலைவனாக கொண்டது.
- கலிங்கம் + அத்து + பரணி = கலிங்கத்துப்பரணி.

**வேதநாயகம் பிள்ளை :**

- பெற்றோர் சவரிமுத்துப் பிள்ளை ஆரோக்கியமாரியம்மை

www.tetcoaching.net

SUCCESS ACADEMY

Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- ஊர் திருச்சி பக்கத்திலுள்ள குளத்தூர்
- தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரிதத்தை எழுதியவர்
- இவர் இயற்றிய நூல்கள் நீதி நூல் திரட்டு, பெண்மதிமாலை, சர்வமயக் கீர்த்தனைகள் முதலியன.
- காலம் 1826 – 1889

**முக்கூடற்பள்ளு :**

- சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று
- மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெறுவது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில் கொண்டுள்ள அழகரைப் (பெருமாள்) பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்படுவது.
- பொருநை (தாமிரபரணி), மணிமுத்தாறு, கோதண்டராம நதி ஆகிய மூன்று ஆறுகள் சீவலப்பேரி (திருநெல்வேலி மாவட்டம்) என்னும் இடத்தில் கூடுகின்றன. எனவே இதனை முக்கூடல் என அழைக்கின்றனர்.
- இதனை இயற்றியவர் "என்னாயினாப் புலவர்"
- காலம் 17-ஆம் நூற்றாண்டு.

**முனைவர் பார்த்தசாரதி :**

- பெற்றோர் சனார்த்தனம், கண்ணம்மாள்.
- வடமொழியில் காளிதாசர் இயற்றிய "சாகுந்தலம்" எனும் நாடகத்தை தமிழில் மொழிபெயர்த்தார்.
- வடமொழியிலுள்ள வெங்கடேச சுப்பிரபாதத்தை தமிழில் மொழிப்பெயர்த்தார்

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- இதனை மறைந்த இசைகுயில் M.S.சுப்புலட்சுமி அவர்கள் பாடியுள்ளார்.
- தமிழ்நாடு அரசு கல்லூரிகளில் பணியாற்றி 2002-ஆம் ஆண்டு சிறந்த இலக்கிய நூல் பரிசினை பெற்றார்.

**இரா.இளங்குமரன் :**

- பெற்றோர் இராமர் – வாழவந்தமை
- ஊர் வாழவந்தான்புரம் (கன்னியாகுமரி மாவட்டம்)
- பிறப்பு 30.01.1930
- "தனித்தமிழ் இயக்கம்" என்னும் நூலுக்கு தமிழ்நாடு அரசு பரிசைப் பெற்றுள்ளார்.

**ஏலாதி :**

- இதனை இயற்றியவர் கணிதமேதாவியார்
- ஏலம் + ஆதி = ஏலாதி அதாவது ஏலம் முதலியன ஆறு பொருள்கள் சேர்ந்து உடல்பிணி போக்குவது போல் இச்செய்யுளில் உள்ள 6 கருத்துக்கள் மக்களின் மனநோயாகிய அறியாமையை போக்கும்.
- ஆறு மருந்துப் பொருள் ஏலம், இலவங்கம், சிறுநாவல்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- 82 செய்யுள்களைக் கொண்டது
- ஆசிரியர் கணிதமேதையார் என்பதால் ஜோதிடத்தில் வல்லவர்
- இவர் மாக்காயனாரின் மாணவர் ஆவார்.
- இவர் திணைமாலை 150 என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- சிறுபஞ்சமூலம் இயற்றிய காரியாசான் உடன் பயின்றவர் ஆவார்.
- இவர் சமண சமயத்தை சார்ந்தவர் ஆவார்.

**இன்னிலை :**

- இதுவும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.
- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் கூறுகிறது.
- இனிமை + நிலை = இன்னிலை
- அறத்துப்பால் - 10
  பொருட்பால் - 09
  இன்பத்துப்பால் - 12
  வீட்டுப்பால் - 14 (இல்லியல் 8, துறவறவியல் 6)
  45
- இதன் ஆசிரியர் பொய்கையார்.
- பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்.
- இதனைத் தொகுத்தவர் மதுரையாசிரியர்.
- கடவுள் வாழ்த்துச் செய்யுளை இயற்றியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

**பரஞ்ஜோதி முனிவர் :**

- திருவிளையாடல் புராணத்தை எழுதியவர்.
- நாகை மாவட்டம் திருமறைக்காட்டில் பிறந்தவர்.
- “எம்பெருமான்” திருவிளையாடலைப் பாடுக என மதுரை மீனாட்சியம்மை கனவில் தோன்றி

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

கூறியதால் இவர் திருவிளையாடல் புராணத்தை இயற்றினார்.

- இவர் இயற்றிய பிற நூல்கள் வேதாராண்ய புராணம், திருவிளையாடற் போற்றி கலிவெண்பா, மதுரை பதிற்றுப் பத்தந்தாதி.
- காலம் 16-ஆம் நூற்றாண்டு.
- திருவிளையாடல் புராணம் மதுரை சோமநாதக் கடவுள் நிகழ்த்திய 64 திருவிளையாடலை விளக்கும்.
- இது மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருஆலவாய்க் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
- இப்புராணத்தில் மதுரைக் காண்டத்தில் -18 பாடல்களும் கூடற்காண்டத்தில் -30 பாடல்களும், திருவால்வாய் காண்டத்தில் -16 பாடல்களும் அமைந்துள்ளன.
- மொத்தம் 3360 பாடல்களைக் கொண்டது.
- பெரிய புராணத்திற்கு அடுத்தபடியாக இந்நூல் சிறப்புற்று விளங்குகிறது.
- புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடல் புராணத்தை வடமொழி ஆலாகிய மகாத்துமியம் என்னும் நூலையும் தழுவி எழுதப்பட்டது.

## முத்தொள்ளாயிரம் :

- மூன்று + தொள்ளாயிரம் = முத்தொள்ளாயிரம்
- சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் புகழ்ந்து, அவர்களைப் பற்றி மூன்று தொள்ளாயிரப் பாடல்கள் அடங்கி நூல்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- சேரர் - 900

  சோழர் - 900

  பாண்டியர் - 900

  2700

- மொத்தம் 2700 பாடல்களில் புறத்திரட்டு என்னும் நூலின் மூலம் 108 வெண்பாக்கள் மட்டுமே காணக் கிடக்கின்றன.
- 22 பாடல்கள் சிதைந்த பகுதிகளாக காணப்படுகின்றன.
- போர் முறைகளைப் பற்றியும், யானை, குதிரை வீரர்களின் இயல்புகள் பற்றியும் உணர்ந்தவராக இதன் ஆசிரியர் இருந்துள்ளார்.
- எனினும் இதனை இயற்றியவர் பெயர் இன்னும் தெரியவில்லை.

**திரிகூடராசப்பக் கவிராயர் :**

- திருக்குற்றால குறவஞ்சி என்னும் நூலை இயற்றியவர்.
- இவர் மேலகரம் என்னும் ஊரில் பிறந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது மேலகரம்.
- மதுரையை ஆண்ட முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர் அவர்களால் பாராட்டப்பெற்றான்.
- இவரைப் போற்றிய மற்றொரு வள்ளல் சொக்கம்பட்டி சின்னஞ்சாத் தேவர்.
- இவர் இயற்றிய பிற நூல்கள் குறவஞ்சி நாடகம், தலபுராணம், அந்தாதி, மாலை உலா, பிள்ளைத்தமிழ்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- குறவஞ்சி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- குறம் என்பது மலை வாழ் மக்களின் வாழ்க்கையை கூறுவது.
- குறவஞ்சி நாடகம் என்ற மற்றொரு பெயரும் உண்டு.
- இதில் குறத்தி தன் நாட்டு வளத்தைப் பாடும் பாடமாக அமைந்துள்ளது.

**இரட்டைப் புலவர் :**

- இளஞ்சூரியர், முதுசூரியர் என்பவர்களே இரட்டைப் புலவர்குளாவர்.
- பிறந்த ஊர் ஆமிலந்துறை
- ஒருவர் பார்வை இழந்தவர், இன்னொருவர் நடக்க இயலாதவர்.
- கால் ஊனமுற்றவரை பார்வை இழந்தவர் தூக்கிச் செல்வார்.
- முதல் இரண்டு அடிகளை ஒருவர் பாட, அடுத்த இரண்டு அடிகளை வேறொருவர் பாடுவார்.
- காலம் 17-ஆம் நூற்றாண்டு
- இவர்கள் "தில்லைக் கலம்பகம்" என்னும் இலக்கியத்தை படைத்தவர்களாவர்.
- இது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- கலம்பகம் 18 உறுப்புகளைக் கொண்டது (புயவகுப்பு, அம்மானை, மறம், குறம் முதலியன)
- அம்மானை என்பது மகளிர் பாடிக்கொண்டே பந்துகளை உருட்டுவது.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- மகளிர் பாடும் பாட்டுக்கு "அம்மானைவரி" என்று பெயர்.

**திருநாவுக்கரசர்:**

- நான்கு சைவ சமய பெரியார்களுள் ஒருவர்.
- விழுப்புரம் மாவட்டம், திருவாமூரில் பிறந்தவர்.
- தந்தை புகழனார், தாய் மாதினியார், தமக்கை புனிதவதியார்.
- இயற்பெயர் "மருள்நீக்கியார்".
- அப்பர், எனவும் வாகீசர் எனவும் அழைக்கப்படுகிறார்.
- சமண சமயத்தில் இருந்தார். அப்போது "தருமசேனர்" என அழைக்கப்பட்டார்.
- காலம் 7-ஆம் நூற்றாண்டு
- பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழும் தேவாரம். 3+3+1
- திருஞானசம்மந்தர் தேவாரம் -3
  திருநாவுக்கரசர் தேவாரம் -3
  சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் -1

  7 தேவாரம்
- முதலாம் மகேந்திரவர்ம பல்லவனால் கல்லைக் கட்டி கடலில் போட்டாலும், கல்மேலே மிதந்து வந்தவர் திருநாவுக்கரசர்.

**மணிமேகலை :**

- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- இது இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm

- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை
- மணிமேகலை துறவு பூண்ட கதையைக் கூறுவது இந்நூல்.
- எனவே மணிமேகலை துறவு என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு.
- பௌத்த (புத்த) சமய சார்புடையது.
- 30 காதைகளைக் கொண்டது.
- இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

SUCCESS ACADEMY



Edited with the demo version of Infix Pro PDF Editor
To remove this notice, visit: www.iceni.com/unlock.htm